2006 செப்டம்பர் 1]

முகத்துவாரத்தை ஆழப்படுத்துவதற்கான பணியினை மேற்கொள்வதற்காக நம்முடைய கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கின்றேன். அதற்காக விரைவிலே அவர்கள் ஆய்வு செய்து, திட்டத்தினை அறிவிக்கின்றேன் என்று என்னிடம் கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி **(*)** இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) ஓய்வூதியம் பெறுவோருக்கு ஒரே சீராகப் பணப் பயன்—முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110–ன்கீழ் அறிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியபோது, அதற்கு முன்பு நான்கு ஊதியக் குழுக்களின் பரிந்துரைகளின்படி ஓய்வூதியதாரர்களும், குடும்ப ஓய்வூதியதாரர்களும் பெற்று வந்த ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றை உயர்த்தி, அதனால் ஏற்படும் பணப் பயன் 1–6–1988 முதல் நடைமுறைக்கு வருமாறு முன்தேதியிட்டு 9–8–1989 அன்று ஆணையிடப்பட்டது.

அப்படி ஆணையிட்டபோது, 500 ரூபாய் வரை மாத ஓய்வூதியம் பெற்று வந்தவர்களை ஒரு பிரிவினராகவும், 500 ரூபாய்க்கு மேல் மாத ஓய்வூதியம் பெற்று வந்தவர்களை மற்றொரு பிரிவினராகவும் கொண்டு, அதன் அடிப்படையில் 1–6–1960–க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு 60 சதவிகிதம் என்று தொடங்கி, படிப்படியாக, 1–10–1984 முதல்

30–9–1987 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு 15 சதவிகிதம் வரை, அதாவது ரூபாய் 300 முதல் ரூபாய் 100 வரை குறைந்தபட்சப் பணப் பயன் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டது. ஆனால், இந்தப் பணப் பயன் உயர்வை எந்தப் பாகுபாடும் இன்றி, 500 ரூபாய் வரை மாத ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 60 சதவிகிதம் உயர்வு என்றும், 500 ரூபாய்க்கு மேல் மாத ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 50 சதவிகிதம் உயர்வு என்றும், ஒரே சீராகப் பணப் பயன் கிடைத்திடும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று, அம்பாசமுத்திரம் தாலுகா--உங்களுடைய ஊர்தான்--அம்பாசமுத்திரம் தாலுகா ஓய்வூதியர் சங்கம், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் 1991-ல் தொடுத்த வழக்கில், அவர்களது கோரிக்கை ஏற்கப்பட்டதன் காரணமாக, பணப்பயன் 60 சதவிகிதம் மற்றும் 50 சதவிகிதம் எனக் கிடைத்திடும் வகையில் 15–6–1998–ல் ஆணை வெளியிடப்பட்டது.

இந்த ஆணை வழக்குத் தொடுத்த சங்கத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால்--அதாவது, இந்த ஆணை, வழக்குத் தொடுத்த அந்த ஒரேயொரு சங்கத்திற்கு மாத்திரம்தான் பொருந்தும் என்பதால், ஒவ்வொரு ஓய்வூதியதாரர் சங்கமும் தனித்தனியாக உயர் நீதிமன்றத்தினை நாடி, அம்பாசமுத்திரம் தாலுகா ஓய்வூதியர் சங்கம் பெற்ற பலனைத் தங்களுக்கும் வழங்க வேண்டுமென்று வழக்குத் தொடுத்து, நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில், அவ்வப்போது அரசு ஓய்வூதியதாரர்களுக்கான பணப் பயனைத் திருத்தி அரசு ஆணை வெளியிட்டு வருகிறது.

இவ்வாறு ஓய்வூதியதாரர்கள் வயது முதிர்ந்த காலத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று, அதனால் ஏற்படுகின்ற கால விரயம், செலவு போன்ற இன்னல்களைத் தவிர்ப்பதற்காக இந்த அரசு ஒரு முடிவு எடுத்துள்ளது. அதனையொட்டி, 1–6–1988 அன்றைய நிலையில் உள்ள ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் முறையே 60 சதவிகிதம் மற்றும் 50 சதவிகிதம் பணப்பயன் உயர்வு அளிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மொத்தம் 82 ஆயிரத்து 423 ஓய்வூதியதாரர்களின் நலன் கருதி இந்த அரசு எடுத்த இநத முடிவின் பயன் இந்த ஆண்டுக்குள் ஓய்வூதியதாரர்களுக்குக் கிடைக்கும். இதனால் அரசுக்குக் கூடுதலாக ஏற்கெனவே இருக்கிற நெருக்கடியில் 3.50 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)